**தலைப்பு 112 – வெளிநாட்டலுவல்கள் அமைச்சு - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 112 – வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டலுசல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) **7002-0-0-35-13 என்ற கட்டுநிதி கணக்கு** | | |
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 50,970,216 ஆக இருந்ததுடன் அது 2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய தீர்க்கப்படாத முற்பணங்களை உள்ளடக்கி இருந்தது. இந்த மீதியில் வெளிநாட்டு தூதரகங்களில் சேவைக்காக வெளிநாடு சென்ற பதவியணியினருக்கு வழங்கப்பட்ட பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்ட 103 பாதுகாப்பு வைப்புகளுக்குரிய ரூபா 32,474,452 மற்றும் உப கட்டுநிதி ரூபா 18,495,764 காணப்பட்டது. | கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட பின்னர் இந்த மீதிகளை தீர்த்துவைப்பதற்கு உரிய பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சு உள்ளகக் குழுவை நியமித்துள்ளது. அதன் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்க்கப்படாத முற்பணங்களை விரைவாக தீர்த்துவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பின் பெறுமதி ரூபா 3,602,632 தொகை 20 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் ரூபா 28,871,820 தொகை 10 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சுக்கு உரியதாகும். அந்த வைப்பினை அறவிடுதல் தொடர்பாக 2009 செப்டெம்பர் 01 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 250 என்ற அமைச்சரவை உள்ளக சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் அந்த வைப்புப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பிரைங்போட் தூதுவராலயம் மூடப்பட்டிருந்த போதிலும் வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பு ரூபா 2,234,933 தீர்த்துவைக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | விரைவாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயல் நிமித்த உப கட்டுநிதி அந்தப் பணிகள் நிறைவுபெற்றவுடன் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 69 சந்தர்ப்பங்களின் போது | -மேற்படி- | செயல் நிமித்த உபகட்டுநிதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டு தீர்க்கப்படாத செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 18,495,764 மீதி கட்டுநிதிக் கணக்கில் காணப்பட்டது. இந்த செயல்நிமித்த உபகட்டுநிதி மீதியில் ரூபா 1,585,560 தொகை 20 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் ரூபா 16,910,769 தொகை 10 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான கால வீச்சிற்கு உரியதாகும். | | |
| (ஆ) | **7002-0-0-35-23 கட்டுநிதி கணக்கு** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 959,519,202 ஆன கட்டுநிதி கணக்கின் மீதியில் ரூபா 56,629,614 தூதரகங்களில் குடியிருக்காத வீடுகளுக்காக வைக்கப்பட்ட 134 வைப்புக்களுக்கு உரியதாக இருந்தது. அப்பெறுமதியில் ரூபா 2,486,516 தொகை 20 வருடங்கள் மற்றும் ரூபா 10,177,716 தொகை 10 வருடங்களை விஞ்சியிருந்த வைப்புப் பெறுமதியாக இருந்ததுடன் ரூபா 27,754,083 தொகை 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலான காலவீச்சிற்கு உரியதாகும். | குடியிருக்காத வீடுகளுக்கு வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பை அறவிடுவதற்கு உரியதாக தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டில் ரூபா 3,460,277 அறவிடப்பட்டுள்ளது. மிகுதி ரூபா 56,629,614 தீர்த்துவைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | தீர்க்கப்படாத கட்டுநிதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது டன் வெளி நாட்டு தூதரகங்களின் உத்தியோகத்தர்களின் சேவை முடிவடையும் சந்தர்ப்பத்தின் போது வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பை அறவிடல் வேண்டும். |
| (ii) | மூடப்பட்டுள்ள மூன்று தூதரகங்களுக்குரிய வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பு ரூபா 9,199,873 தீர்த்து வைத்திருக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த தூதரகங்கள் மூடுவதற்கான தீர்மானம் விரைவாக எடுப்பதுடன் உரிய வீட்டு வாடகை உடன்படிக்கைக் காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன் விலகிச் செல்கின்ற உத்தியோகத்தர்களின் கட்டுப்பாட்டிற்கு புறம்பாக | விரைவாக வைப்புக்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்படுவதாகவும் பௌதீக ரீதியில் உரிய நாட்டில் செயற்படு நிலையில் காணப்படாதிருந்த மையினாலும் இந்த மீதிகளை அறவிடுவதற்கு நேரடியாக முன்னிற்றல் கஷ்டமாக இருந்தது. எனினும் இந்த மீதி தொடர்பாகவும் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (iii) | வீட்டு வாடகை செலுத்துவதற்குரிய 1967 பெப்ரவரி 26 ஆம் திகதிய இலக்கம் X-301 என்ற அமைச்சு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி வெளிநாட்டு தூதரகங்களில் சேவைகளுக்காக வெளிநாடு சென்ற பதவியணியினர்களிடமிருந்து பெறப்பட்ட பாதுகாப்பு வைப்பு / வாடகை முற்பணத்திற்காக உரிய உத்தியோகத்தர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் வீடுகளுக்காக இடம்பெற்ற நட்ட இழப்புக்களின் காரணமாக வீட்டு உரிமையாளர்களினால் மீளச்செலுத்தப்படாத முற்பண தொகை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்காமல் ரூபா 6,009,786 அரசாங்கத்தின் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | புதிய வீட்டு வாடகைகளை பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக முன்னைய உத்தியோகத்தர்கள் பயன்படுத்தி விடுகளை பயன்படுத்துவது நடைமுறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் அறவிடுதலை மேற்கொள்வதற்கு குறித்துரைத்த நபரை தீர்மானிப்பதற்கு முடியாதிந்தமையினால் மிகவும் நீண்ட காலத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்ற தகவல்களை கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் கவனம் செலுத்தி வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்றது. | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு அறவிடுவதற்கான திட்ட முறைமையொன்றைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயல் நிமித்த உபகட்டுநிதி அந்தப் பணிகள் நிறைவு பெற்றவுடன் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமக தூதரகங்களில் தீர்க்கப்படாத முற்பத்தில் ரூபா 5,619,509 செயல் நிமித்த உபகட்டுநிதி காணப்பட்டது. இந்தப் பெறுமதியில் 10 வருடங்களை விஞ்சிய உப கட்டுநிதி ரூபா 446,388 தொகையும் ஐந்து வருடங்களை விஞ்சியிருந்த உபகட்டுநிதி ரூபா 1,724,058 உம் ஆகும். | வெளிநாட்டு தூதரகங்களுக்குரிய செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 5,619,509 தொடர்பாக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயல் நிமித்த உப கட்டுநிதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 50 (II) இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் 08 மூலதன செலவின விடயங்களில் ரூபா 153,106,068 மற்றும் 04 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 45,575,069 ஆக 58 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 மற்றும் 02/2023 இன் மூலம் அறிவிக்கப்பட்ட பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகள் வழங்கப் பட்டிருந்த போதிலும் ஆகக் கூடிய வகையில் செலவினங்களைக் குறைத்தல் மற்றும் 2022 இன் மதிப்பீடு தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தை விட 2023 இன் செலவினங்களை மேற்கொள்வதற்கான காலத்தில் அந்நியச் செலாவணி விகிதத்தில் ஏற்பட்ட சாதாகமான நிலைமையினால் நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது. | மதிப்பீடுகளை இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு | | | |
| | (i) தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நியமனமொன்று அல்லது பதவி உயர்வு ஒன்றில் அங்கீரிக்கப்பட்ட சேவை எண்ணிக்கையின் பதவிகளுக்காக மாத்திரமே வழங்க முடியும். வெளிநாட்டு சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை 09 ஆக இருந்த போதிலும் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்ட 08 பணிப்பாளர் நாயகத்தை உள்ளடக்கி உள்ளபடியான அளவு 17 ஆக இருந்தது. மேலும் பதிற்கடமை மேலதிக செயலாளர்கள் 05 பேர்களை நியமிப்பதற்காக நியமன அதிகாரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய நியமனங்கள் ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சின் நடவடிக்கைகளுக்கு இடையூறு இன்றி பேணிச் செல்வதற்கு வெளிநாட்டு சேவையின் I தரத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் பதிற் கடமை அடிப்படையில் | பதிற் கடமைக்காக நியமிக்கும் போது தாபன விதிக்கோவை மற்றும் பணி நடைமுறை விதிக் கோவைகளைப் பின்பற்றுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நியமிப்பதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| | | (ii) | பணி நடைமுறை விதிக் கோவையின் 136 ஆவது பிரிவின் பிரகாரம் எந்தவொரு பதவிக்கும் உத்தியோகபூர்வ ரீதியில் உரித்தான படிகள் மற்றும் வரப்பிரசாதங்கள் அந்தப் பதவியின் பதிற் கடமை அல்லது கடகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அந்த பதிற் கடமை அல்லது கடமைகளை நிறைவேற்றுகின்ற அல்லது காலத்தின் போது உரிமை கோர முடியுமாக இருந்த அங்கீகரிக்கப்பட்ட பதவி மற்றும் நியமன அதிகாரியின் அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்ட பதிற் கடமை பணிப்பாளர்கள் 08 பேர்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,650,191 எரிபொருள் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நியமனங்கள் சிரேஷ்ட நிலையின் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் எரிபொருள் படி உரித்தான பதவிகள் ஆனமையால் அந்த உத்தியோகத்தர்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் எரிபொருள் படி செலுத்த வேண்டியிருந்ததை குறிப்பிடுகின்றோம். | உத்தியோகபூர் ரீதியில் உரித்தற்ற படிகள் செலுத்த முடியாதிருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 156(i)(அ) | | சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்த உத்தியோகத்தருக்கு | இது தொடர்பாக நிருவாக ரீதியிலான | மேலதிக செலுத்துதல்களை மீளளிப்புச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சம்பளமாக ரூபா 558,471 மேலதிகமாச் செலுத்துதலை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டுள்ளமையால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தேவையான ஆவணங்கள் சட்டப் பிரிவிற்கு அனுப்பப் பட்டுள்ளது. | செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 880 | பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணை தேவையினை பூர்த்திசெய்து கொள்வதற்காக திறைசேரியில் பேணிச் செல்லப்படுகின்ற பிணை சங்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை தேவையினை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (இ) | 2015 யூலை 23 ஆம் திகதிய இலக்கம் 07/2015 என்ற ஓய்வூதிய சுற்றறிக்கையின் 08 viii ஆம் பந்தி | ஒவ்வொரு மாதத்தின் பங்களிப்பு பணம் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் 2023 பெப்ரவரி முதல் நவம்பர் வரை பங்களிப்பு பணம் ரூபா 874,014 அவ்வாறு அரசாங்க | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் பங்களிப்பு பணத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| | சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். |

## 2.4 வங்கி கணக்கு செயற்பாடுகள்

வங்கி கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லண்டன் தூதரகத்திற்கு உரியதாக வைப்புச் செய்யப்பட்ட ஸ்ரேலிங் பவுண் 8786 தேறாதிருந்ததுடன் 05 வெளிநாட்டு தூதரகங்களில் 2016 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய 10 காசோலைகள் இனங்காணப்படாத வரவாக காணப்பட்டது. | தேறாதிருந்த பணம் எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புச் செய்யப்பட்ட போதும் தேறாதிருந்த பணம் மற்றும் இனங்காணப்படாத வரவுகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 16 வெளிநாட்டு தூதரகங்களில் 2021 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வங்கி கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட 47 காசோலைகள் மற்றும் மீளாய்வாண்டின் செப்டெம்பர் முதல் நவம்பர் வரை அமைச்சின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 501,006 ஆன 17 காசோலைகளை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேர் செலவு வைத்தல்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மூடப்பட்டுள்ள 06 வெளிநாட்டு தூதரகங்களில் 08 வங்கிக் கணக்குகள் செயலிழந்து காணப்பட்டது. | செயலிழந்த வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயலிழந்த வங்கிக் கணக்குகளை விரைவாக மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது கட்டார் அரசாங்கத்தின் சேவையில் ஈடுபட்டு விபத்து காரணமாக மரணமடைந்த 06 இலங்கையர்களின் இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளும் கோவைகள் காலதாமதத்தின் காரணமாக மூடுவதற்கு தொழில் நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. இதன் போது விண்ணப்பதாரர்கள் உரிய பிரகாரம் ஆவணங்களை கால ரீதியில் சமர்ப்பித்திருக்கும் போது கட்டார் தூதுவராலயத்தில் உத்தியோகத்தர்களின் குறித்துரைத்த காலத்தின் போது இழப்பீட்டு பணத்தை பெற்றுக்கொள்வதற்கு பொறுப்பாக இருக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் இழப்பீடு மற்றும் படிகளை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் செயற்திறனாக நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | கட்டார் அரசாங்கத்தின் சேவையில் ஈடுபடுவதற்காக வெளிநாடு சென்ற நபர்கள் திடீர் விபத்துக்களில் 2012 செப்டெம்பர் 10 ஆந் திகதி மரணமடைந்திருந்ததுடன் கென்சியூலர் பிரிவு இந்த சம்பவத்திற்குரிய இழப்பீடு கோரும் தகவல்கள் 2013 பெப்ரவரி 06 ஆம் திகதி தூதுவர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் செயற்திறனாக நிறைவேற்றப்படல் வேண்டும். |

கட்டார் ஆரம்ப நீதிமன்ற இழப்பீடாக (Blood Money) கட்டார் றியால் 200,000 நெருங்கிய உறவினர்களுக்கு (NOK) செலுத்துமாறு குறிப்பிட்டிருந்த போதிலும் இந்தப் பணம் செலுத்தாமையின் காரணமாக வழக்கை முன்கொண்டு செல்வதற்கான அதிகாரம் கையளித்து சட்ட ரீதியான ஆவணங்கள் 2013 நவம்பர் 25 ஆம் திகதி தூதுவர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அத்திகதியில் இருந்து 04 வருடங்கள் கடக்கும் வரையில் வழக்கிற்குரிய எந்தவொரு ஆவணமும் கோவையில் கையடக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வழக்கை முன்கொண்டு நடாத்தி செல்வதற்கான அதிகாரம் கையளித்து மீண்டும் சட்ட ரீதியான ஆவணங்கள் 2019 பெப்ரவரி 18 ஆம் திகதி தூதுவர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் இழப்பீடு அறவிடப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | கட்டார் அரசாங்கத்தின் சேவையில் ஈடுபடுவதற்காக வெளிநாடு சென்ற நபர்கள் 2012 ஒக்டோர் 21 ஆம் திகதி திடீர் விபத்தில் மரணமடைந்திருந்ததுடன் 2012 நவம்பர் 06 ஆம் திகதி உரிய இழப்பீட்டுக் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இழப்பீடு கோருவதற்குரிய வழக்கை கோவையிடுவதற்கு தேவையான சட்டரீதியான ஆவணங்கள் 2013 ஆகஸ்ட் 22 ஆந் திகதி தூதுவர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் 04 | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்கள் கடந்ததன் பின்னர் அதாவது 2017 நவம்பர் 20 ஆம் திகதி சட்ட நிறுவனமாக Asma Ali Advocates & Legal Consultants நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கு அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. எனினும் 2018 செப்டெம்பர் 26 ஆந் திகதி இந்த இழப்பீட்டுப் பணம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக Fahid Al Dosary Law Firm நிறுவனம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த சட்ட நிறுவனத்திற்கு அதிகாரத்தை கையளிப்பதற்கு உரிய ஆவணங்கள் உறவினர்களினால் (NOK) பூர்த்தி செய்து 2018 நவம்பர் 19 ஆந் திகதி கட்டார் தூதுவர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு சட்ட நிறுவனத்திற்கு கையளித்தல் தொடர்பாகவும் மற்றும் வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஈ) | கடந்த ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற இழப்பீட்டு கோரிக்கைகள் தொடர்பான விடயங்கள் அவதானிக்கப்பட்ட போதும் அந்த அவதானிப்புக்கள் தொடர்பாக 2024 மே 30 ஆந் திகதி வரையிலும் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (i) | சவூதி அரேபியாவிற்கு வேலைப் வாய்ப்பிற்காக சென்றிந்த நபர் ஒருவர் 2012 ஒக்டோபர் 24 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டு முழுமையாக ஊனமுற்ற நிலைமைக்கு உட்பட்டமை. | | |
| (ii) | குவைத் நாட்டில் வீட்டு வேலைவாய்ப்பிற்காக 2009 திசெம்பர் 19 ஆந் திகதி வெளிநாடு சென்ற நபர் 2012 சனவரி 29 ஆம் திகதி மரணமடைந்தமை. | | |
| (iii) | 17 வருடங்கள் அளவிலான காலம் குவைத் வீட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டிருக்கும் போது நோய் ஏற்பட்டு காப்பகத்திற்கு வருகை தந்து அதன் போது மரணமடைந்தமை. | | |
| (iv) | ஜித்தாவில் 2011 ஆம் ஆண்டின் போது மரணமடைந்த நபருக்கு மரணமடைந்திருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்துதல் மற்றும் இழப்பீட்டை பெற்றுக்கொள்ளுதல். | | |
| (உ) | வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்கிடையே க.பொ.த(சா.தரம்) க.பொ.த(உ.தரம்) பரீட்சை சான்றிதழ் மற்றும் பிறப்புச் சான்றிதழ் விவாக, மரணச் சான்றிதழ்கள் செயற்திறனாக உறுதிப்படுத்தலுக்கு வசதியாக இலகுபடுத்துவதற்காக இலத்திரனியல் ஆவணங்கள் உறுதிப்படுத்தும் முறைமை (e-DAS) பதிவாளர் நாயகத் திணைக்களம் மற்றும் பரீட்சைத் திணைக்களத்துடன் ஒன்றிணைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகள் | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | திட்டமிடப்படுகின்ற செயற்பாடுகள் கால ரீதியில் நிறைவேற்றப்படல் வேண்டும். |

அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட கொழும்பு 08, எல்விட்டிகல மாவத்தை 117 வத்தயில் மாடி வீட்டுத் தொகுதியில் 17 வீட்டு அலகுகளுக்காக உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | உரித்துறுதியைப் பெற்றுக் கொள்வதற்குரியதாக காணி பதிவேட்டு விபரங்கள் காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளல் தற்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | ஆதனங்களின் உரிமைத் தன்மை அமைச்சிற்கு கையேற்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுத் திறைசேரி ஊடாக நிதிக்குத்தகை முறையின் கீழ் பெறப்பட்டிருந்த குத்தகைக் காலம் முடிவடைந்த 08 வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை. | வங்கி பொறுப்பில் உள்ள பதிவுச்சான்றிதழ் அமைச்சிற்கு பெற்று மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்கள் உரித்து கையேற்கப்படல் வேண்டும். |
| (இ) | கென்பரா தூதுவராலயத்தின் 2022 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளின் உள்ள படியான மீதி 86 ஆக இருந்த போதிலும் பேரேட்டின் பிரகாரம் மீதி 117 ஆனமையால் 31 தொலைபேசிகளின் பற்றாக்குறை காணப்பட்டதுடன் காணப்பட்ட 86 தொலைபேசிகளும் செயற்பாடற்று காணப்பட்டது. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | பற்றாக்குறையான 31 தொலைபேசிகளுக்காக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் செயற்பாடற்றுக் காணப்படுகின்ற தொலைபேசிகளை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வெளிநாட்டு தூதரகங்களில் 2002 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய தேவையற்ற வகையில் நிதியைப் பயன்படுத்துதல் மற்றும் பணவைப்பு செய்யப்படாமை மற்றும் 02 சம்பவங்களுக்குரிய ரூபா 16,176,674 நட்டம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 106 இன் பிரகாரம் இழக்கப்பட்ட பணத்தை உடனடியாக மீளளிப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வெளிநாடு சென்ற இலங்கையர்கள் மரணத்திற்கு உட்படுகின்றமை, தொழில் இழக்கின்றமை, பகுதி அல்லது முழுமையாக ஊனமுற்ற நிலைமைக்கு உட்படுவதன் காரணமாக உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கான இழப்பீடு, காப்புறுதி, சேவையை முடிவுறுத்தும் போது சம்பளம் போன்றவையாக வெளிநாட்டவர்களிடமிருந்து கிடைத்த ரூபா 56,919,349 தொகை 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையிலான காலத்திலிருந்து உரிய நபர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | இழப்பீடாக கிடைத்த பணத்தை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அவுஸ்திரேலியா, சுவீடன் மற்றும் கென்யா போன்ற நாடுகளில் வெளிநாட்டு தூதரகங்களில் காணப்படுகின்ற இலங்கை அரசாங்கத்திற்குரிய கட்டிடங்கள் காணப்பட்ட போதிலும் அவை பராமரிப்புச் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் உத்தியோகபூர்வ இல்ல வாடகையாக ரூபா 173,537,875 செலுத்தப்பட்டிருந்தது. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | சொத்துக்களை உச்ச அளவில் சிறந்த வகையில் பராமரிக்காமை தொடர்பில் உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 06 ஆம் திகதி கணக்கு குழுவின் கட்டளை இலக்கம் 14 இன் பிரகாரம் இலங்கை வெளிநாடுகளுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை தொடர்பாக தற்போதைய அமைச்சின் பிரகாரம் வகைப்படுத்தல்கள் மேற்கொண்டு இந்த உடன்படிக்கை பிரயோக ரீதியில் அமுல்படுத்தப்படுகின்ற முறை மற்றும் தற்போதைய நிலைமையும், உடன்படிக்கை சட்டங்களை மீறி இருக்குமாயின் அவ்வாறு மேற்கொண்டமைக்கான காரணத்தையும் குறிப்பு அறிக்கையொன்று கணக்கு குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | கணக்குக் குழுவின் கட்டளைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மரணமடைந்த 07 உத்தியோகத்தர்களிடமிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 472,532 கடன் மீதியும், சேவையை விட்டுச் சென்ற 15 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,367,830 கடன் மீதியிலிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 662,946 தொகையும், சேவை முடிவுறுத்தப்பட்ட 09 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 339,955 கடன் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 299,955 தொகையும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. மேலும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற 14 உத்தியோகத்தர்களில் ரூபா 1,499,176 இனங்காண முடியாத கடன் மீதியொன்றை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வெளிநாட்டு தூதரகங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 21 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,117,255 கடன் மீதிகளில் எந்தவொரு தவணைப் பணமும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த, சேவையை விட்டுச் சென்ற, சேவை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் மற்றும் இனங்காணப்படாத கடன் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 690 ஆக இருந்த போதிலும் | பதவியணியினர் தகவல்கள் | தேவையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட |

உள்ளபடியான பதவியணியினர் 613 ஆனமையால் வெற்றிடப் பதவிகள் 97 மற்றும் மிகை பதவிகள் 20 ஆக இருந்தது. தூதரகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகள் 500 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 356 ஆனமையால் 144 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. மேலும் வெளிநாட்டுத் தூதரகங்களில் நிலையத்தில் அல்லாத 548 பதவியணியினர்கள் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்கள் 446 ஆனமையால் வெற்றிட பதவிகள் 102 ஆக இருந்தது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பதவியணியினர்களைத் திருத்திக் கொள்வதற்கும், அத்தியவசியப் பதவியணியினரை ஆட்சேர்த்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.